# பெரியாழ்வார் பாடலில் தாய்மையுணர்வு

முனைவர் **ரா.விஷ்ணு பிரியா**,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,(தன்னாட்சி)சிவகாசி.

DOI 10.5281/zenodo.15171497.

Abstract :

The state of devotion can be called the state of mind where the heart melts with the increase of love and attachment to God and the desire to reach Him increases. Bhakti literature flourished as a means of expressing the increase in the consciousness that arises in the heart. The period from the 6th century to the 9th century AD is called the period of Bhakti movement. During this period, Saivism and Vaishnavism have given a great contribution to Bhakti literature. In this research article, we will look at the motherly feeling towards Periyazhwar Thirumal, one of the twelve Azhwars in the Vaishnavism religion.

Key Words : Aalwar - Devotion - Literature.

இறைவனை நினைத்து இடையறா அன்பும் பற்றும் மேலோங்கி அவனை அடையும் ஆவல் பெருக்கத்தால் உள்ளம் உருகி நோற்கும் தன்மையை பக்தி நிலை எனலாம். உள்ளத்தில் கிளர்ந்து எழும் உணர்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்தும் வாயிலாக பக்தி இலக்கியங்கள் மலர்ந்தன. கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் பக்தி இயக்க காலம் என்பர். இக்கால கட்டத்தில் சைவமும், வைணவமும் பக்தி இலக்கியத்திற்கு பெருங்கொடை நல்கியுள்ளது.இதில் வைணவ சமயத்திலுள்ள பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வார் திருமால் மீது கொண்ட தாய் உள்ளத்தை இவ்வாய்வு கட்டுரை வழி காண்போம்.

**தாய்மையின் சிறப்பு**

உலகமெங்கும் தாயன்புக்கு ஈடுஇணை எதுவுமில்லை எனலாம். தன்னலமற்ற அன்பிற்குத் தாயன்பைத் தான் சான்றாகக் காட்டி பேசுவர். தாய்மை என்பதற்கு ”அருகுபோல் தழைத்து ஆல்போல் வேரூன்றிபல்கிப் பெருகி வளவாழ்வு வாழ்வதற்கு”[1] மூலமாயுள்ள முதல்நிதி என்று பேரகரமுதலி பொருள் தருகிறது. தாய் என்ற சொல்லுக்கு “முதன்மை “[2] என்று பொருள் தருகிறது கௌரா தமிழ் அகராதி.

**பெரியாழ்வாரின் தாயுள்ளம்**

பெரியாழ்வார் பாண்டியன் அவையில் நாராயணனே பரம்பொருள் என்று நிறுவிப் பொற்கிழி பெற்றார். அகமகிழ்ந்து பாண்டியன் அவரை யானை மீது ஏற்றி ஊர்வலம் செய்வித்தான். பெரியாழ்வாரின் அச்சிறப்பைக் கண்டு மகிழ இறைவன் திருமகளுடன் கருடன் மேல் வந்து ஆழ்வாருக்குக் காட்சியளித்தான். இறைவனை நேரில் காண்பவர் எவராயிருந்தாலும் இறைவன் தனக்கு முன்னால் தோன்றினால் நன்மைகளையே வேண்டிப் பெறுவர். ஆனால் ஆழ்வார் தமக்கென ஒரு நன்மையையும் இறைவனிடம் வேண்டவில்லை. இறைவனுடைய மென்மைக்கும் அழகுக்கும் என்ன தீங்கு வருமோ என்று பயந்து அவன் பல்லாண்டு வாழ வாழ்த்தி காப்பிடும் தகுதி


http://Creativecommons.org//license/by/4.0/.

தனக்கு இல்லை என்று ஆழ்வாருக்கு தோன்றவே இல்லை. ஒரு தாயனவள் தன் குழந்தையின் மீது கண்பட்டு விடுமோ என்று எண்ணிக் காப்பிடுவாள். அதைப் போல பெரியாழ்வார் திருமால் அளவற்ற ஆற்றலை உடையவன் என்பதை மறந்து தாயுள்ளத்தோடு

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு"(பெரி.திரு.1-1-1)

எனக் காப்பிடுகிறார். மேலும் திருமாலுக்கு மட்டுமல்லாது திருமாலின் அடியவர்களுக்கும், அருள் நிறைந்த திருமகளுக்கும் , வலிமை பொருந்திய சுடராழி, பாஞ்சசன்யம் முதலியவற்றிக்கும் அவர் காப்புச் செய்கின்றார். இதனை,

"அடியோமும் நீயும் பிரிவின்றி
வாழவேண்டும் உன்வல மார்பில்
உறையும் மங்கையும் உன் வலக்கை"(பெரி.திரு.1-1-2)

என்று ஆழ்வார் தாயுள்ளத்தோடு இறைவனை நினைத்து பாடியுள்ளதை அறிய முடிகிறது.

**தொட்டிலில் இடும்விழா**

செல்வர்கள் வீட்டில் பிறக்கும் குழந்தைக்கு நடத்தப் பெறும் பெயர் சூட்டு விழாவிற்குப் பல பெரிய மனிதர்கள் வருகை தருவதுடன் பல விதமான அன்பளிப்புப் பொருள்களையும் அவர்கள் கொண்டு வந்து குழந்தையை வாழ்த்துவர். ஆயர் குலத்தில் திருமாலே குழந்தையாக வந்து பிறந்ததால் ஆயர்பாடி விழாக்கோலம் பூண்டது. ஆயர்பாடியில் பிறந்த கண்ணனுக்கு அவன் பிறந்த பன்னிரண்டாம் நாள் தொட்டிலில் இடும் விழா சிறப்பாக நடைபெற்றது. இதனைப் பெரியாழ்வார்

"பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள்
எத்திசையும் சயமரம் கோடித்து
முத்த மாமலை தாங்கிய மைந்தனை
உத்தா னம்செய்து உகந்தனர் ஆயரே"(பெரி.திரு.1- 4-2)

என்று குறிப்பிடுகின்றார். அதுமட்டுமல்லாது கண்ணனுக்கு உலகினைப் படைத்த பிரமனே தன் கைகளால் அழகிய சிறுதொட்டிலை ஆணிப் பொன்னால் செய்து அதில் மாணிக்கமும் , வைரமும் இழைத்து அனுப்பினான் என்று பாடும் பெரியாழ்வார் தேவர்கள் கண்ணனுக்குக் கொடுத்தானுப்பிய சீர்களை,

"உடையார் கனமணியோடு ஒண்மா துளம்பூ"(பெரி.திரு.1-4-3)

என்றும்

"எந்தம் பிரானார் எழில்திரு மார்வாக்கு
சந்தம் அழகிய தாமரைத் தானர்க்கு
இந்திரன் தானும் எழிலுடைக் கிண்கிணி"
(பெரி.திரு.1- 4-6)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடல்கள் வழி கண்ணனின் பெயர் சூட்டு விழாவினை வர்ணிப்பதை அறிய முடிகிறது.

**தாலாட்டல்**

தாலாட்டு என்பது தாய் தன் குழந்தை உறங்குவதற்காக தன் நாவை அசைத்து இசையோடு பாடும் பாட்டு தாலாட்டு என்பதாகும். தாயையும் சேயையும் இணைக்கும் அன்புக்கயிறு தான் தாலாட்டு ஆகும். "தாய் ஆழங்காண முடியாத அன்புக்கடல் அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு என்பர்"[3]. யாசோதை தன் குழந்தையான கண்ணனைத் தொட்டிலிலே கண் வளர்த்தித் தாலாட்டிய போது,

"மாணிக்கங்கட்டி வயிரம் இடைக்கட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்"
(பெரி.மூன்றாம்.திரு.1-4-1)

என்று பாடுவதுடன்

"தாமைரக் கண்ணணே! தாலேலோ!"(பெரி.திரு.1-4-3)

என்றும்

"சோதிச் சுடர் முடியாய்! தாலேலோ!
சுந்தரத் தோளனே!"(பெரி.திரு.1-4-6)

என்று பாடுகின்றார் பெரியாழ்வார்.பெரியாழ்வாரைப் போலவே கோசலை இராமனைத் தொட்டிலிட்டு தாலாட்டும் காட்சியைக் குலசேகரஆழ்வார்

"கொங்குமலி கருங்குழலாள் கோசலைதன் குலமதவாய்!"[4] (பெரு.திரு.8-3)

என்று பாடியிருப்பதை அறிய முடிகின்றது. மேலும் பெரியாழ்வார் தன் பாடலில் கண்ணனின் அழகைத் தனித்தனியே பாராட்டி காட்டுகிறார். ஊர்ச் சிறுவர்களைக் காட்டிலும் தன் குழந்தை அழகு வாய்ந்ததென்று பெருமைப்படுகிறது பெரியாழ்வாரின் தாயுள்ளம்.

**தொட்டிலிடல்**

குழந்தையைத் தொட்டிலிடும் செயலைப் பெரியாழ்வார் நயத்துடன் பாடியுள்ளார். குழந்தையைத் தாய்மார்கள் உறங்க வைப்பதற்காகத் தொட்டிலில் இடுவர். பிள்ளைகளோ சில நேரம் உறங்கவர். சில நேரம் உறங்காது. தொட்டிலில் இருந்து வெளியே எடுத்து இடுப்பில் உட்கார வைத்தாலும் அதற்கும் ஒப்பமாட்டார்கள். பெண்களுக்கு இருக்கக்கூடிய அனுபவத்தை பெரியாழ்வார் எங்கு எப்படி உணர்ந்தரோ என்று தெரியவில்லை.

"கிடக்கில் தொட்டிய கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்
ஒடுக்கிப் புல்லில் உதரத்தே பாய்ந்திடும்"

என்று பெரியாழ்வாரின் தாயின் கூற்று.

**பிழை மறுத்தல்**

தாய் தன் குழந்தைகளைப் பிறர் குறை கூறக்கூடாது என்று நினைப்பாள். பெரியாழ்வார் பாடல்களிலும் யசோதையாகிய தாய் தன் மகன் கண்ணனை ஆய்ச்சியர் குறை கூறுவதைப்


http://Creativecommons.org//license/by/4.0/.

பொறுக்க மறுக்கிறாள். அம்மா உன் மகன் எங்கள் வீட்டுக்கு வந்து வெண்ணெயை விழுங்கினான் என்றாள் ஆய்ச்சி ஒருத்தி. வேறொரு ஆய்ச்சி உருக்க வைத்திருந்த வெண்ணெயைத் தாழியோடு எடுத்துச் சாப்பிட்டு விட்டுத் தாழியையும் உடைத்து விட்டான் என்பதை

"தூசனஞ் சொல்லும் தொழுத்தைமாரும்
தொண்டரும் நின்றவிடத்தில் நின்று
தாய் சொல்லிக்கொள்வது தன்மங் கண்டாய்"(பெரி.திரு.7-8)

என்று தன் மகனுக்காகப் பரிந்து எழும் பாச உணர்வு பெரியாழ்வாரின் தாய்மைப் பண்பிற்கு எல்லையைக் காட்டுகிறது.

**தொகுப்புரை**

பெரியாழ்வார் தன் பாடல்களில் கண்ணணைக் குழந்தையாகப் பாவித்துப் போற்றும் பகுதிகளில் தனது தாய்மையும், குழந்தையின் மீதுள்ள அக்கறை அதிகம் இடம் பெறுகின்றது. பாடலடிகள் யசோதை பேசுவதாக அமைந்தாலும் பெரியாழ்வாரின் தாயன்பையும் அக்கறையையும் நாம் உணர முடிகிறது.

**சான்றெண்விளக்கம்**

1. செந்தமிழ் சொற் பிறப்பியல் பேரகரமுதலி, பக்376.
2. கௌரா தமிழ் அகராதி, பக்.410.
3. க.சண்முகசுந்தரம், மூங்கில் இலை மேலே பக்29.
4. பெருமாள் திருமொழி பா.8-3.

**பார்வை நூல்கள்**

1. நாலாயிர திவ்வ பிரபந்தம்,பள்ளத்தூர் பழ.பழனியப்பன்(உ.ஆ)திருவரசு புத்தக நிலையம்,சென்னை.
2. பெருமாள் திருமொழி,முனைவர் ந.ஆனந்தி(உ.ஆ),ராமையா பதிப்பகம்,சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.